IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.

O.S. No.33/2018

Deposition of Witness for PW1.

Name : திரு.ஜோண்ஸ்
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.06.2025.

<u>சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.</u>

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். 13.06.1964 தேதியிட்ட உலகு பிள்ளை 1ம் பிரதிவாதியின் தகப்பனார் சுப்பிரமணிய ஆசாரிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ–1, 31.08.1965 தேதியிட்ட பத்மநாபபுரம் உரிமையில் நீதிமன்றத்தில் அ.வ.எண்.67/1965 ல் வழங்கப்பட்ட தீர்ப்பு சான்றிட்ட நகல் வா.சா.ஆ–2, 13.12.1973 தேதியிட்ட பத்பநாபபுரம் உரிமையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்றுகை மனு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3, 01.09.1979 1ம் பிரதிவாதியின் தந்தை சுப்பிரமணியம் ஆசாரிக்கு வாதியின் தந்தை முத்துநாயகத்திற்கு எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரம் அசல் வா.சா.ஆ–4, 08.01.2014 தேதியிட்ட எனக்கு வில்சன் சுந்தர் ராஜ் எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரம் அசல் வா.சா.ஆ–5, 12.05.2014 தேதியிட்ட நான் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ–6, அதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ–7, 29.05.2014 தேதியிட்ட 1வது பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ–8, அ.வ.எண்.678/1105ME வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பதில் உரை மலையாளத்தில் உள்ளது (தமிழாக்கத்துடன் கூடியது ) சான்றிட்ட நகல் வா.சா.ஆ–9, அந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு சான்றிட்ட நகல்

வா.சா.ஆ–10, அ.வ.எண்.680/1105 வழக்கில் உள்ள பத்மநாபபுரம் உரிமையியல் நீதிமன்றத்தில் வழங்கிய தீர்ப்பு சான்றிட்ட நகல் வா.சா.ஆ–11, 27.01.1986 தேதியிட்ட அ.வ.எண்.67/1965 ல் செல்லம்மாள் பிள்ளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த FS Memo சான்றிட்ட நகல் வா.சா.ஆ 12, 19.06.1959 தேதியிட்ட பீமன் என்ற வேதமாணிக்கம் நாடார் பெயரில் உள்ள செட்டில்மென்ட் பத்திரம் மலையாளத்தில் உள்ளது தமிழாக்கத்துடன் உள்ளது சான்றிட்ட நகல் வா.சா.ஆ–13, 16.09.1969 தேதியிட்ட அ.வ.எண்,249/1969 பத்மநாபபுரம் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு சான்றிட்ட நகல் வா.சா.ஆ 14.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.